# கரூர் மாவட்டச் செயற்குழு ஆலோசனைக் கூட்டம்

## மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

கரூர், நவ. 22-

கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



கரூர் மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (22.11.2025 - சனிக்கிழமை) மதியம் 12.00 மணிக்கு கரூர் மாவட்டக் கழக அலுவலகம் (கலைஞர் அறிவாலயம்) தளபதி அரங்கில் மாவட்டக் கழக அவைத் தலைவர் டி.ராஜேந்திரன் தலைமையிலும், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் கே.சி.பழனிச்சாமி, கழக நெசவாளர் அணி தலைவர் நன்னியூர் ராஜேந்திரன், கழக சட்டத்துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், கழக நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம் எம்.எல்.ஏ., அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ எம்.எல்.ஏ., கிருஷ்ணராய புரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி MLA, கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் முனவர் ஜான், கழக வர்த்தக அணி துணை செயலாளர் வே.பல்லவி ராஜா, கழக தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயகுமார் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறுகிறது.

அதுசமயம் மாநில நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், கழக பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்பொறுப்பாளர்கள், மாவட்ட, மாநகர அனைத்து அணி அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1. இளைஞர்களின் எழுச்சி நாயகர், கழக இளைஞர் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்த நாள் விழா

இவ்வாறு கரூர் மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.

# விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

விழுப்புரம், நவ. 22-

விழுப்புரம் மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் நவம்பர் 27 பிறந்த நாளை முன்னிட்டு விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (22.11.2025 - சனிக்கிழமை) காலை 9.30 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.

எனது தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் விழுப்புரம் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் துரை.கி.சரவணன், மாநில பொறியாளர் அணி செயலாளர், வானூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் எஸ்.கே.பி.கருணாநிதி முன்னிலை வகித்து கலந்து கொள்கிறார்கள்.



இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு விழுப்புரம் மத்திய மாவட்ட பொறுப்பாளர் டாக்டர். இரா.இலட்சுமணன் எம்.எல்.ஏ., தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு அமைச்சூர் சிலம்பம் சங்கம் சார்பில் கோவை கிருஷ்ணா கல்லூரியில் மாநில அளவில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில் வெள்ளி பதக்கம் பெற்ற ரித்திகாவிற்கு கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன் சால்வை அணிவித்து வாழ்த்துக் கூறினார். உடன் மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை அமைப்பாளர் பிரின்ஸ், தொண்டரணி அமைப்பாளர் முருகன், கணபதிராமன் ஆகியோர் உள்ளனர்.

### நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் - மறைந்த

# 739 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி - குடும்பத்தினருக்கு கலைஞர் குடும்ப நலநிதி!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. வழங்கினார்!

நாமக்கல், நவ. 22-

மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு கழகம் என்றைக்கும் துணை நிற்கும் என்ற நோக்கில் நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட இராசிபுரம் நகரம், இராசிபுரம் ஒன்றியம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், சேந்தமங்கலம் ஒன்றியம், கொல்லிமலை ஒன்றியம்,நாமக்கல் கிழக்கு, மேற்கு, தெற்கு, நாமக்கல் ஒன்றியம், புதுச்சத்திரம் வடக்கு தெற்கு ஒன்றியம், மோகனூர் ஒன்றியம் நாமகிரிப்பேட்டை ஒன்றியம்,நாமகிரிப்பேட்டை பேரூர்,ஆர்.புதுப்பட்டி பேரூர் சீராப்பள்ளி பேரூர்,பட்டணம் பேரூர்,பிள்ளாநல்லூர் பேரூர் மற்றும் மோகனூர் பேரூரில் கடந்த செப்டம்பர் 2024 முதல் அக்டோபர் 2025 வரை மறைந்த 739 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்கள் குடும்பத்திற்கு கலைஞர் குடும்ப நலநிதி நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர்களில் மறைந்த கழக உறுப்பினர்களின் குடும்பத்திற்கு கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் வழிகாட்டுதலுடன் முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதியை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் வழங்கி வருகிறார்.

அதன்படி, நாமகிரிப்பேட்டை பேரூர் மற்றும் சீராப்பள்ளி பேரூரில் மறைந்த 50 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பங்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதியை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர்கள் நாமகிரிப்பேட்டை கே.அன்பழகன், சீராப்பள்ளி என்.செல்வராஜ், சார்பு அணி நிர்வாகிகள் பொன். சித்தார்த், கிருபாகரன், நாமகிரிப்பேட்டை பேரூராட்சி தலைவர் சேரன், இளைஞரணி அமைப்பாளர் சுரேஷ், மாவட்ட பிரதிநிதி அருள், மோகனசுந்தரம், பழனிவேல், பாபு, ராமலிங்கம், கனகவள்ளி, சீராப்பள்ளி அவைத்தலைவர் தியாகராஜன், துணைச் செயலாளர் சண்முகசுந்தரம், இளைஞரணி அமைப்பாளர் மணிகண்டன், துணை அமைப்பாளர் கார்த்திகேயன், தகவல் தொழில்நுட்ப அணி கலைவாணன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இதேபோல் மோகனூர் பேரூரில் மறைந்த 36 கழக உறுப்பினர்கள் மோகனூர் ஒன்றியத்தில் மறைந்த 73 உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தினருக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதியை வழங்கினார்.

நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் முனவர் ஜான், ஒன்றிய கழக செயலாளர் பெ.நவலடி, பேரூர் கழக செயலாளர் செல்லவேல், பேரூராட்சி தலைவர் வனிதா மோகன், பொதுக்குழு உறுப்பினர் சரவணன், சார்பு அணி அமைப்பாளர்கள் பொன்.சித்தாரத், பா.கிருபாகரன், குமரவேல், துணை அமைப்பாளர்கள் வரதராஜன், பிரதிநிதி முத்துசாமி, கார்த்தி, சரவணன், ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இராசிபுரம் ஒன்றியத்தில் மறைந்த 47 கழக உறுப்பினர்கள், பட்டணம் பேரூரில் 11 கழக உறுப்பினர்கள், பிள்ளாநல்லூர் பேரூரில் 25 கழக உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பங்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதியை ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், ஒன்றிய திமுக செயலாளர் கே.பி.ஜெகநாதன் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட செயலாளர் கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் பேரூர் திமுக செயலாளர்கள் பட்டணம் பொன். நல்லதம்பி, பிள்ளாநல்லூர் அ. சுப்பிரமணியம், சார்பு அணி அமைப்பாளர்கள் பா.கிருபாகரன், பொன்.சித்தார்த், சிவக்குமார், பன்னீர்செல்வம், பி.எஸ். புரம் ரவி, சத்தியசீலன், சிவசேகரன், கண்ணன், பாலு, பாலமுருகன். முகேஷ், பட்டணம் ஐடி விங் சரவணன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ராசிபுரம் நகரத்தில் மறைந்த 28 கழக உறுப்பினர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்திற்கு நகரக் கழக செயலாளர் என் ஆர் சங்கர் முன்னிலையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முத்தமிழறிஞர் கலைஞர் குடும்ப நல நிதி வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நகர் மன்ற தலைவர் முனைவர் கவிதா சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

எருமப்பட்டி ஒன்றியத்தில் மறைந்த 156 கழக உறுப்பினர்கள், எருமப்பட்டி பேரூரில் மறைந்த 6 கழக உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு அஞ்சலி செலுத்தி அவர்களது குடும்பத்தின ருக்கு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் குடும்ப நல நிதியை ஒன்றிய கழக செயலாளர் பி.பாலு (எ) பாலசுப்ரமணியம் முன்னிலையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி வழங்கினார்.

இந்நிகழ்வில் பேரூர் கழக செயலாளர் பழனியாண்டி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் பொன்.சித்தாரத், கிருபாகரன், சார்பு அணி நிர்வாகிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தர்மபுரி நகரம் டேகிஸ்ட்பேட்டை பகுதியில் நடைபெற்ற S.I.R சிறப்பு முகாமினை தர்மபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் சதீஷ் மற்றும் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தர்மபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆலோசனைகள் வழங்கினர். உடன் தர்மபுரி வருவாய் கோட்டாட்சியர் காயத்ரி, தர்மபுரி நகர மன்ற தலைவர் லட்சுமி மாது, தர்மபுரி கிழக்கு நகர செயலாளர் நாட்டான் மாது, தர்மபுரி மேற்கு நகர பொறுப்பாளர் எம்.பி.கௌதம் மற்றும் ரஹீம், பாபுசேட், தர்மபுரி கிழக்கு மற்றும் மேற்கு நகர பொறுப்பு குழு உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய பேரூர் கழக செயலாளர்கள், BLA2,BDA,BLO உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131